ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1991 - 2016 ඔක්තෝබර් මස 28 වැනි සිකුරාදා - 2016.10.28

*1991 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | *1942* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1959* |

**கவனிக்க.**– (i) *குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தும்) சட்டமூலம் 2016, ஒகத்து மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் 2016, ஒகத்து மாதம் 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(iii) *காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் 2016, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து **சிங்கள மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து **தமிழ் மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, **சிங்கள மொழி** :யில் அல்லது **தமிழ் மொழி** :யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 **சிங்கள மொழி** : மூலத்தில் அல்லது **தமிழ் மொழி** : மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - நுவரெலியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஒற்றோபர் 10.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| நுவரெலியா | கொத்மலை | மெதபனைப் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கொத்மலை பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், நுவரெலியா |

10-1539

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஒற்றோபர் 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | நாற்புறமும் சூழலும் மற்றும் கங்கவட்ட கோறளை | நாற்புறமும் சூழலும் மற்றும் கங்கவட்ட கோறளைப் பிரிவின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

10-1540

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மாத்தளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஒற்றோபர் 10.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | நா உல | கங்கல பல்லேசிய பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் மாத்தளை மேற்குப் பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தளை |

10-1541

## மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

### புகைப்படக் கலைஞர் மற்றும் வீடியோ கெமரா கலைஞர் பதவிக்காக தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்த்தல்

மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் புகைப்படக் கலைஞர் மற்றும் வீடியோ கெமரா கலைஞர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியின் பிரகாரம் கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளினைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிகளின் எண்ணிக்கை - புகைப்படக் கலைஞர் : 01
- வீடியோ கெமரா கலைஞர் : 01

1. **ஆட்சேர்க்கும் முறை.**- அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமைகளினைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரரினுள் அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட மற்றும் செயன்முறை நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

***கல்வித் தகைமை.***- க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி உட்பட குறைந்தது 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

***தொழில் தகைமைகள்.***- புகைப்படம் எடுத்தல்/வீடியோ கெமரா படமெடுத்தல் பற்றிய தேசிய தொழில் தகைமை (NVQ) ஐந்தாம் (5) மட்டத்திற்குக் குறையாத பாடநெறியினைப் பின்பற்றி சான்றிதழினைப் பெற்றிருத்தல்.

***அனுபவம்.***- பதவிக்குரிய கடமை சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட அனுபவம் விசேட தகைமையாகக் கருதப்படும்.

***உடற்தகைமை.***- அனைத்து விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல் மற்றும் உள நலனுடன் இருத்தல் வேண்டும்.

***வேறு தகைமைகள் :***

(i) இலங்கையின் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நடத்தையுள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தினத்திற்கு அத்தகைமைகள் அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

3. **கடமையில் நியமிப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் அவற்றிற்கு அளிக்கப்படும் கடமைகள் :**

(அ) ***புகைப்படக் கலைஞர் பதவி.***- நிலையான புகைப்படம் பிடித்தல் மற்றும் அச்சிடல், அச்சிடல் மற்றும் புகைப்படக் கூடத்திற்குப் பொறுப்பாயிருத்தல் மற்றும் அதன் பேணல் நடவடிக்கை, புகைப்பட பதிவேட்டறைக்குப் பொறுப்பாயிருத்தல் மற்றும் அதன் பேணல் நடவடிக்கை, புகைப்பட ஆவணங்களினைக் கொண்டு நடாத்தல் மற்றும் சுட்டியிடல், புகைப்படப் பிரிவின் இருப்பு மற்றும் களஞ்சியத்திற்குப் பொறுப்பான நடவடிக்கையினை மேற்கொள்ளல், வீடியோ புகைப்படம் பிடித்தல், போட்டோ கெமிட்டு முறைமையில் புகைப்படம் பிடித்தல் மற்றும் டிஜிட்டல் முறைமைக்கிணங்க புகைப்படம் தயாரித்தல், கணினியுடன் தொடர்புடைய அச்சிடல் மற்றும் நிறுவனத் தலைவரினால் பதவிக்கு உரித்தாக அளிக்கப்படும் ஏனைய கடமைகள்.

(ஆ) ***வீடியோ கெமரா கலைஞர் பதவி.***- வீடியோ எடுத்தல், விசேட முக்கியத்துமான சந்தர்ப்பங்களினை உருவமைத்தல் மற்றும் பதிப்பிடல், பதிப்பிடல் உபகரணம் மற்றும் பதிப்பிடல் கூடத்திற்குப் பொறுப்பான நடவடிக்கைகளினை மேற்கொள்ளல் மற்றும் அதன் பேணல் நடவடிக்கை, வீடியோ நாடா பதிவேட்டறைக்குப் பொறுப்பாயிருத்தல் மற்றும் அதன் பேணல் நடவடிக்கை, வீடியோ நாடா பதிவேட்டறையினைப் பேணல் மற்றும் சுட்டியிடல், வீடியோ கெமரா பிரிவின் இருப்பு மற்றும் களஞ்சியசாலைக்குப் பொறுப்பாக

நடவடிக்கைகளினை மேற்கொள்ளல், மதிப்பீட்டினைத் தயார்செய்தல், எந்தவொரு வகைக்கும் உரிய கெமராவினைக் கையாளல், டிஜிட்டல் முறைமைக்கிணங்க உருவ சட்டத்தினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தயாரித்தல், கணினியுடன் தொடர்புடைய பதிப்பிடல் மற்றும் நிறுவனத் தலைவரினால் பதவிக்கு உரித்தாக அளிக்கப்படும் ஏனைய கடமைகள்.

4. **வயது** :

குறைந்த எல்லை : 18 வருடங்கள்.
அதிகபட்ச எல்லை : 35 வருடங்கள்.

5. **மாதாந்தக் கொடுப்பனவு** : 17,508 ரூபா.

பொருத்துதல் கொடுப்பனவு : 9,831 ரூபா.
வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : 7,800 ரூபா.

6. ***கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் மற்றும் செயன்முறைப் பரீட்சையில் பெற்றுத்தரப்படும் புள்ளி வழங்கல் முறை*** :

(அ) ***செயன்முறைப் பரிசீலனை*** :

| *பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள்* | *அதிகபட்ச புள்ளிகளின் அளவு* | *சித்தியடை வதற்கான புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| (அ) புகைப்படக் கலைஞர் பதவி | | 40 |
| * கெமராவினை செயற்படுத்தல் மற்றும் உருவப் படமெடுத்தல் | 60 | |
| * வெளிச்சம் வழங்கல் மற்றும் நவீன தொழில் நுட்ப முறையின் பாவனை | 20 | |
| * தெளிவாக புகைப்பட மெடுத்தல் | 20 | |
| மொத்தம் | 100 | |
| (ஆ) வீடியோ கெமரா கலைஞர் பதவி | | 40 |
| * வீடியோ கெமரா மற்றும் அதற்குரிய உபகர ணத்தினை செயற்படுத்தல் | 30 | |
| * செய்தி உள்ளடக்கத்திற்குப் பொருத்தமான விதத்தில் காட்சிகளினைத் தெரிவுசெய்தல் மற்றும் தரவுகளினைச் சேகரித்தல் | 20 | |
| * ரூபவாஹினி காட்சிகளுக்கு உரிய இயற்கை வெளிச்சத்தினை உபயோகித்தல் மற்றும் உருவப்படுத்தலுக்காக மின் வெளிச்சத்தினை உபயோகித்தல் | 20 | |
| * கணினி தொழில்நுட்ப உபயோகத்துடன் செய்தி பதிப்பிடல் பற்றிய இயலுமை | 10 | |
| * ஒலிநாடாக்களினை பதிதல் தொழில்நுட்பம் மற்றும் அதற்குரிய உபகரணங்களின் பாவனை பற்றிய அறிவு | 10 | |
| * ரூபவாஹினி மேடையினுள் உருவப்பட மெடுத்தல் பற்றிய பொதுவான அறிவு | 10 | |
| மொத்தம் | 100 | |

(ஆ) ***கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :***

| *புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள்* | *அதிகபட்ச புள்ளிகளின் அளவு* | *தெரிவுசெய்யப்படுவதற்குக் கருத்திற்கொள்ளப்படவேண்டிய குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | உரித்தற்றது |
| 2. மேலதிக தொழில் தகைமைகள் | 20 | |
| 3. மேலதிக அனுபவம் | 25 | |
| 4. கணினி இயலுமை | 20 | |
| 5. ஆங்கில மொழித்திறன் | 15 | |
| 6. நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 | |

**குறிப்பு**.- செயன்முறை பரிசீலனையில் சித்திபெற்ற விண்ணப்பதாரரினுள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரிசீலனை மற்றும் செயன்முறைப் பரிசீலனை ஆகிய இரண்டிலும் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளில் திறமை தொடர் ஒழுங்கிற்கிணங்க மற்றும் நிலவும் வெற்றிடத்தின் எண்ணிக்கைக்கிணங்க பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

7. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**.- நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகளினை மாத்திரமாகும். நேர்முகப் பரீட்சையில் அனைத்து உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் உரிய விதத்தில் தயாரிக்கப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் ஆள் அடையாளப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்களினைப் பதிவுசெய்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு.

8. **விண்ணபத்தினைச் சமர்ப்பித்தல்** :

(அ) விண்ணப்பங்கள் 2016.11.18 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பதாக கீழ்க்காணப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17 ஆவது மாடி,
சுஹுருபாய,
பத்தரமுல்லை.

(ஆ) விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியின் பெயரினைக் குறிப்பிடல் வேண்டும்.

(இ) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்றவாறற்ற விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதம் பற்றி எவ்வித முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

9. **பொய்யான தகவல்களினை வழங்கல்**.- தங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் உள்ள ஏதாவது தகவல்கள் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்பதாக அறியப்படுமாயின் தங்களது பரீட்சார்த்த தகைமை இரத்துச்செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் அறியப்படுமாயின் அதற்குரிய நடைமுறை வழிகளின் ஊடாக பதவி நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

செயலாளர்,
மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு**

புகைப்படக் கலைஞர் மற்றும் வீடியோ கெமரா கலைஞர் பதவிக்காக தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்த்தல்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) :----.
சிங்களத்தில்/ தமிழில் :----.
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.

1.1 முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :
சிங்களத்தில்/ தமிழில் :----.
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

3. பிறந்த திகதி :
ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.

3.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் வயது :
வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.

4. பால் (ஆண்-M, பெண்-F) :
(உரிய எழுத்தினை கூட்டினுள் குறிப்பிடவும்.)

5. திருமணமானவரா/ திருமணமாகாதவரா ? :----.

6. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :
(i) சிங்களத்தில்/ தமிழில் :----.
(ii) ஆங்கிலம் (பெரிய எழுத்துக்களில்) :----.

7. தொலைபேசி இலக்கம் :

நிரந்தரம் :----. கையடக்கம் :----.

8. பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் பற்றிய விபரங்கள் :
(அ) கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (சா. த.) :
ஆண்டு :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உ. த.) :
ஆண்டு :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |

(ஆ) தொழில் தகைமைகள் :----.
(இ) அனுபவம் :----.
(ஈ) வேறு தகைமைகள் :----.

9. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

.............................................. ஆகிய நான், இங்கு குறிப்பிடப்படும் அனைத்து விடயங்களும் உண்மையானது மற்றும் சரியானது என பிரதிக்கினைப்படுத்துகின்றேன். நான் அரசாங்க சேவையில் பதவியிறக்கம் அல்லது கருணை அடிப்படையிலான மாற்றீடான முறையில் வினைத்திறனின்மையின் பேரில் இளைப்பாற்றப்படவில்லை எனவும், பதவியினை விட்டு விலகியவராக கருதப்படவில்லை எனவும், உறுதியளிக்கின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்ட விடயங்கள் ஏதாவது பொய்யானது அல்லது தவறானது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாக வெளிக்காட்டப்படுமாயின் கடமையில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு பொருத்தமற்றவராக்குவதற்கு உட்படுவேன் எனவும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறான நிலைமை தெளிவாயின் எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படாது பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு உட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

10-1253/ 1

---

## மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு

### உதவிப் புகைப்படக் கலைஞர் பதவிக்காக தற்காலிக அடிப்படையில் ஆட்சேர்த்தல்

மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் உதவிப் புகைப்படக் கலைஞர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியின் பிரகாரம் கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளினைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவிகளின் எண்ணிக்கை - உதவிப் புகைப்படக் கலைஞர் : 01

1. **ஆட்சேர்க்கும் முறை.**- அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமைகளினைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரரினுள் அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படும் திறன் மதிப்பீடு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

2. **தேவையான தகைமைகள் :**

***கல்வித் தகைமை.***- கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத விதத்தில் இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

***தொழில் தகைமை.***- உரிய துறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில் தகைமை விசேட தகைமையாகக் கருதப்படும்.

***அனுபவம்.***- உரிய துறையில் கடமை அனுபவம் விசேட தகைமையாகக் கருதப்படும்.

***உடற்தகைமை.***- அனைத்து விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பாகத்திலும் கடமையாற்றுவதற்கும், பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்குப் போதுமானளவு உடல் மற்றும் உள நலனுடன் இருத்தல் வேண்டும்.

*வேறு தகைமைகள்* :

(i) இலங்கையின் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பதாரர் சிறந்த நடத்தையுள்ளவராக இருத்தல் வேண்டும்.
(iii) பதவிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில்/வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தினத்திற்கு அல்லது அத்தினத்திற்கு முன்போ அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

3. **கடமையில் நியமிப்பதற்கான நிபந்தனைகள் மற்றும் அவற்றிற்கு அளிக்கப்படும் கடமைகள்**.- அலுவலகத்தில் கடமையினை நிறைவேற்றல் மற்றும் மேற்கொள்வதற்காக தேவையான பொது அடிப்படைத் தேவைகளினுள் தீர்மானிக்கப்பட்ட அரை துறை மற்றும் துறைசார் திறனின்றி நிறைவேற்றப்படக்கூடிய அடிப்படைக் கடமை அளிக்கப்படும் பல்நோக்கு சேவை வகையாக இந்த சேவை வகுப்பு கருதப்படும். இந்த கடமைக்குரிய கடமைகளினுள் எந்தவொரு கடமைப் பொறுப்புக்களும் திணைக்களத்தின் தலைவர்/நியமன அதிகாரியினால் இந்த சேவை வகுப்பிற்குரிய அலுவலருக்கு அளிக்கப்பட இயலும்.

இப்பதவி தற்காலிகமானது. தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட சம்பளம் இந்தப் பதவிக்கு உரித்தானது.

4. **வயது** :

குறைந்த எல்லை : 18 வருடங்கள்.
அதிகபட்ச எல்லை : 45 வருடங்கள்.

5. **மாதாந்தக் கொடுப்பனவு** : 14,234 ரூபா
**பொருத்துதல் கொடுப்பனவு** : 10,006 ரூபா
**வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு** : 7,800 ரூபா

6. **திறன் மதிப்பீடு நேர்முகப் பரீட்சையில் பெற்றுத்தரப்படும் புள்ளி வழங்கல் முறை** :

| புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | அதிகபட்ச புள்ளிகளின் அளவு 100% | தெரிவுசெய்யப்படுவதற்குக் கருத்திற்கொள்ளப்படவேண்டிய குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | உரித்தற்றது |
| தொழில் தகைமைகள் | 25 | |
| அனுபவம் | 40 | |
| தகவல் தொழில்நுட்பம்/ கணினி இயலுமை பற்றிய தகைமை | 10 | |
| நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 05 | |
| | 100 | |

**குறிப்பு**.- திறன் மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் திறமை தொடர் ஒழுங்கிற்கிணங்க மற்றும் நிலவும் வெற்றிடத்தின் எண்ணிக்கைக்கிணங்க பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

7. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**.- நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்த பரீட்சார்த்திகளினை மாத்திரமாகும். நேர்முகப் பரீட்சையில் அனைத்து உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் உரிய விதத்தில் தயாரிக்கப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக கீழ்க்குறிப்பிடப்படும் ஆள் அடையாளப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்களினைப் பதிவுசெய்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்தல்** :

(அ) விண்ணப்பங்கள் 2016.11.18 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்பதாக கீழ்க்காணப்படும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

செயலாளர்,
மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17 ஆவது மாடி,
சுஹுருபாய,
பத்தரமுல்லை.

(ஆ) விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியின் பெயரினைக் குறிப்பிடல் வேண்டும்.

(இ) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்றவாறற்ற விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதம் பற்றி எவ்வித முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பொய்யான தகவல்களினை வழங்கல்**.- தங்களால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் உள்ள ஏதாவது தகவல்கள் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்பதாக அறியப்படுமாயின் தங்களது பரீட்சார்த்த தகைமை இரத்துச்செய்யப்படும். அவ்வாறான பொய்யான அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் அறியப்படுமாயின் அதற்குரிய நடைமுறை வழிகளின் ஊடாக பதவி நீக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

செயலாளர்,
மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மாநகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு**

உதவி புகைப்படக் கலைஞர் பதவிக்காக ஆட்சேர்த்தல்

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. முதல் எழுத்துக்களுடன் பெயர் (திரு./ திருமதி/ செல்வி) :----.
சிங்களத்தில்/ தமிழில் :----.
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.

1.1 முதல் எழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :
சிங்களத்தில்/ தமிழில் :----.
ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

3. பிறந்த திகதி :
ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.

3.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தில் வயது :
வருடங்கள் :---- மாதங்கள் :---- நாட்கள் :----.

4. பால் (ஆண்-M, பெண்-F) :
(உரிய எழுத்தைக் கூட்டினுள் குறிப்பிடவும்)

5. திருமணமானவரா/ திருமணமாகாதவரா ? :----.

6. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :
   (i) சிங்களத்தில்/ தமிழில் :----.

   (ii) ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்) :----.

7. தொலைபேசி இலக்கம் :

   நிரந்தரம் :----. கையடக்கம் :----.

8. பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் பற்றிய விபரங்கள் :
   (அ) கல்வித் தகைமைகள்.- க. பொ. த. (சா. த.) :
   ஆண்டு :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

க. பொ. த. (உ. த.) :
ஆண்டு :----.

| பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |

   (ஆ) தொழில் தகைமைகள் :----.
   (இ) அனுபவம் :----.
   (ஈ) வேறு தகைமைகள் :----.

9. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

   ............................................. ஆகிய நான், இங்கு குறிப்பிடப்படும் அனைத்து விடயங்களும் உண்மையானது மற்றும் சரியானது என பிரதிக்கினைப்படுத்துகின்றேன். நான் அரசாங்க சேவையில் பதவியிறக்கம் அல்லது கருணை அடிப்படையிலான மாற்றீடான முறையில் வினைத்திறனின்மையின் பேரில் இளைப்பாற்றப்படவில்லை எனவும், பதவியினை விட்டு விலகியவராக கருதப்படவில்லை எனவும், உறுதியளிக்கின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்ட விடயங்கள் ஏதாவது பொய்யானது அல்லது தவறானது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாக வெளிக்காட்டப்படுமாயின் கடமையில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு பொருத்தமற்றவராக்குவதற்கு உட்படுவதாகவும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அவ்வாறான நிலைமை தெளிவாயின் எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படாது பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு உட்படுவதாகவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

10-1253/ 2

## நீதி அமைச்சு

### நீர்க்குழாய் தொழில்நுட்பவியலாளர், மின்சார தொழில்நுட்பவியலாளர், மேசன் மற்றும் தச்சுத் தொழிலாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்

நீதி அமைச்சின் நீர்க்குழாய் தொழில்நுட்பவியலாளர் 3 பதவிகள் மற்றும் மின்சார தொழில்நுட்பவியலாளர் 2 பதவிகள், மேசன் 5 பதவிகள் மற்றும் தச்சுத் தொழிலாளர் 5 பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **கல்வித் தகைமைகள்**.- நீர்க்குழாய் தொழில்நுட்பவியலாளர், மின்சார தொழில்நுட்பவியலாளர், மேசன், தச்சுத் தொழிலாளர்.- கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆகக்குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

2. **தொழிற்றகைமைகள்** :

***நீர்க்குழாய் தொழில்நுட்வியலாளர்***.- நீர்க்குழாய் தொழில்நுட்பவியலாளர் பதவியின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற தொழில்நுட்வியல்/தொழில் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழிற் திறமைகளின் (N. V. Q.) நான்காம் (4) தரத்திற்குக் குறையாத தரத்திலான தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

***மின்சார தொழில்நுட்பவியலாளர்***.- மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவியின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழிற் திறமைகளின் (N. V. Q.) நான்காம் (4) தரத்திற்குக் குறையாத தரத்திலான தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

***மேசன்***.- மேசன் பதவியின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற தொழில்நுட்பவியல்/ தொழில் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில் திறமைகளின் (N. V. Q.) நான்காம் (4) தரத்திற்குக் குறையாத தரத்திலான தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

***தச்சுத் தொழிலாளர்***.- தச்சுத் தொழிலாளர் பதவியின் செயற்பாடுகளுடன் தொடர்புடைய மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படுகின்ற தொழில்நுட்பவியல்/தொழில் பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில் திறமைகளின் (N. V. Q.) நான்காம் (4) தரத்திற்குக் குறையாத தரத்திலான தேர்ச்சிச் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்.

3. **அனுபவம்** :

***நீர்க்குழாய் தொழில்நுட்பவியலாளர்***.- நீர்க்குழாய் தொழில்நுட்பத் துறையில் 2 வருட அனுபவம் ;
***மின்சார தொழில்நுட்பவியலாளர்***.- மின்சார தொழில்நுட்பத் துறையில் 2 வருட அனுபவம் ;
***மேசன்***.- மேசன் தொழில் துறையில் 2 வருட அனுபவம் ;
***தச்சுத் தொழில்***.- தச்சுத் தொழில் துறையில் 2 வருட அனுபவம்.

4. **உடற்தகைமைகள்**.- எல்லா விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் உள ரீதியான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

6. **பிற தகைமைகள்** :

(i) இலங்கைப் பிரசையாகவிருத்தல் ;
(ii) சிறந்த நல்லொழுக்கமுடையவராய் இருத்தல் ;
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான (1 முதல் 5 வரையிலான) எல்லாத் தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். தகைமைகளை நிரூபிப்பதற்காக சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படமாட்டார்கள்.

7. **சம்பள அளவுத் திட்டம்.**- மாதமொன்றுக்கு 25,790 ரூபா - 10 x 270 - 10 x 300 - 10 x 330 - 12 x 350 - 38,990 ரூபா (PL3-2016) ; 2016.02.23 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளம் உரித்தாகிறது.

8. **ஆட்சேர்ப்பு முறை.**- தொழில்சார் பரீட்சையொன்றின் மூலம் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

9. **கடமையின் தன்மை :**

***நீர்க்குழாய் தொழில்நுட்பவியலாளர்.***- நீதி அமைச்சுக்குரிய-

(i) கட்டிடங்களுக்கு நீர் வழங்குவதற்காக நிலத்திற்கு அடியிலுள்ள நீர்த்தாங்கிகளை உரியவாறு இயங்கச் செய்தல் ;

(ii) நீர்ப்பம்புகளை இயங்கச் செய்தல் மற்றும் பேணல் ;

(iii) மலக் கழிவுப் பொருட்கள் முறைமையின் பேணல் வேலைகள் மற்றும் பழுதுபார்த்தல் வேலைகளை நிறைவேற்றுதல் ;

(iv) மலசலகூட துணைப் பாகங்கள் மற்றும் நீர்க்குழாய் துணைப்பாகங்களின் பேணல் மற்றும் பழுதுபார்த்தல் வேலைகளை நிறைவேற்றுதல் ;

(v) கட்டிடங்களில் நீர் வழங்குதல் சரியாக உள்ளதா என அவதானித்தல் ;

(vi) அவசர சந்தர்ப்பங்களில் வளவினுள் நீர் மற்றும் கழிவுப் பொருள் முறைமையின் பொருத்துதல்கள் மற்றும் பேணல் வேலைகள் ;

(vii) அமைச்சின் வளவுக்கு நீர் வழங்கும் நீர்மானி சம்பந்தமாக ஏதேனுமொரு சிக்கல் இருப்பின் அதுபற்றி ஆராய்ந்து பார்த்து அறிக்கையிடுதல் ;

(viii) திறனுடனான நீர்ப்பாவனை மற்றும் நீரின் தரத்தைப் பற்றி தினமும் ஆராய்ந்து பார்த்து அறிக்கை யிடுதல் ;

(ix) அமைச்சின் வளவின் முன்புறத்தில் உள்ள தடாகம் மற்றும் நீர்க்குழாய்களை உரிய தரத்தில் பேணுதல் ;

(x) அமைச்சின் செயலாளர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர் ஒருவரால் உரித்தாக்கப்படுகின்ற கடமைகள்.

***மின்சார தொழில்நுட்பவியலாளர்.***- நீதி அமைச்சுக்குரிய-

(i) கட்டிடங்களில் மின்சாரம் பொருத்துதல், அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கு அமைவாக உள்ளதென மற்றும் செயல் படுகின்றதா எனப் பரீட்சித்துப் பார்த்தலும் பேணலும் ;

(ii) வளி சீராக்கிகள் மின்சார வழங்குதல்களின் பேணல் வேலைகள் ;

(iii) கட்டிடங்களின் மின் வயர்களை இடுதல், பேணல் மற்றும் பழுதுபார்த்தல்கள் ;

(iv) மின் உயர்த்தியின் செயற்பாட்டுக்காக மின்சாரம் வழங்குதலை பரீட்சித்துப் பார்த்தலும் பேணுதலும் ;

(v) சகல நீர்ப்பம்புகளின் மின்சாரம் வழங்குதலை உரியவாறு பேணுதலும் தேவையான பழுதுபார்த்தல் களும் ;

(vi) கட்டிடங்களுக்கு மின்சாரத்தை வழங்குதல் மற்றும் தொடர்புகளை இடைவிடாது செயற்படும் நிலையில் நடாத்திச் செல்வதற்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் மின்சார ஜெனரேட்டரின் பேணல் நடவடிக்கைகளை உரியவாறு நடாத்திச் செல்லல் ;

(vii) விசேட சந்தர்ப்பங்களில் வளவினுள் தேவையான மின்சாரத்தை பொருத்துதல் மற்றும் பேணல் வேலைகளை நிறைவேற்றுதல் ;

(viii) அமைச்சின் செயலாளர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரொருவரினால் உரித்தாக்கப்படுகின்ற கடமைகள்.

***மேசன் தொழிலாளர்.***- நீதி அமைச்சுக்குரிய-

(i) கட்டிடங்களில் மற்றும் பிற நிர்மாண வேலைகளில் மேசன் துறை சம்பந்தப்பட்ட பேணல் வேலைகள் ;

(ii) அமைச்சின் செயலாளர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரொருவரினால் உரித்தாக்கப்படுகின்ற கடமைகள்.

***தச்சுத் தொழிலாளர்.***- நீதி அமைச்சுக்குரிய-

(i) கட்டிடங்களில் மற்றும் பிற நிர்மாண வேலைகளில் தச்சுத் துறை சம்பந்தப்பட்ட பேணல் வேலைகள் ;

(ii) அமைச்சின் செயலாளர் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரொருவரினால் உரித்தாக்கப்படுகின்ற கடமைகள்.

10. **சேவை நிபந்தனைகள்.**- இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியமுடையதுமாகும். விதவைகள் மற்றும் அநாதைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். (ஓய்வூதியத் திட்டம் பற்றி அரசாங்கத்தால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்படுதல் வேண்டும்) ;

11. இவ்வறிவித்தலில் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரங்களைச் சரியாகப் பூர்த்திசெய்து 2016.11.28 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பின்வரும் முகவரிக்கு பதிவு அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நீதி அமைச்சின் நீர்க்குழாய் தொழில்நுட்பவியலாளர் பதவி", "நீதி அமைச்சின் மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவி", "நீதி அமைச்சின் மேசன் தொழிலாளர் பதவி", "நீதி அமைச்சின் தச்சுத் தொழிலாளர் பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும். தற்பொழுது அரசாங்க சேவையில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்கள்/ நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

செயலாளர்,
நீதி அமைச்சு,
மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி,
கொழும்பு 12.

12. **தொழில் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் முறை.**-

***நீர்க்குழாய் தொழில்நுட்பவியலாளர் :***

| பாடம் | பாடத்திட்டம் | காலம் | உச்ச புள்ளிகள் | சித்திபெறவேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|---|
| நீர் வழங்கல் மற்றும் பேணல், வடிகால் பழுது பார்த்தல்கள் மற்றும் பேணல்கள் | வீட்டு மற்றும் மாடிக் கட்டிடங்கள் தொடர்பான நீர்க்குழாய்களை இடுதல், பேணல் வேலைகள், நீர் மோட்டார்களை பொருத்துதல், நீர் வடிகால் அமைப்பு வடிகால் குழாய் முறைமையை தாபித்தல், அடிப்படைத் திட்டங்கள், வாசிப்புத் திறன் பற்றிய நடைமுறை அறிவு | 3 மணித்தியாலங்கள் | 100 | 40 |

***மின்சார தொழில்நுட்வியலாளர் :***

| *பாடம்* | *பாடத்திட்டம்* | *காலம்* | *உச்ச புள்ளிகள்* | *சித்திபெறவேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| மின்சாரம் வழங்குதல், பழுது பார்த்தல்கள் மற்றும் பேணல் வேலைகள் | மின்சாரத் தடம், மாடிக் கட்டிடங்களுக்கு மின்சாரக் கம்பிகள் இணைத்தல், மின்சாரக் கம்பி கொள்ளளவுகளை தேர்ந்தெடுத்தல் உட்பட வீட்டு மற்றும் மாடிக் கட்டிடங்களுக் காக மின்சாரத்தை வழங்குதல், மின்சார பேணல் வேலைகள் மற்றும் மின்சார திட்டங்களை வாசித்தல், வரைதல் தொடர்பாக அடிப் படை அறிவு, மின் உற்பத்தி இயந்திரங் களைப் பேணல் தொடர்பான செய் முறை அறிவு | 3 மணித்தி யாலங்கள் | 100 | 40 |

***தச்சுத் தொழிலாளர் பதவி :***

| *பாடம்* | *பாடத்திட்டம்* | *காலம்* | *உச்ச புள்ளிகள்* | *சித்திபெறவேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| தச்சுத் தொழில் துறை யின் அடிப்படை அறிவு | திட்டங்கள் மற்றும் வரைதல்களை புரிந்து கொள்ளல், காரியத் துக்குத் தகுதியான மரங்களை இனங் காணுதல், நிர்மா ணத்துறை மற்றும் தளபாடங்கள் பற்றிய புரிந்துணர்வு, கை ஆயுதங்களை இனங்காணுதல் | 3 மணித்தி யாலங்கள் | 100 | 40 |

***மேசன் தொழிலாளர் பதவி :***

| *பாடம்* | *பாடத்திட்டம்* | *காலம்* | *உச்ச புள்ளிகள்* | *சித்திபெறவேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| மேசன் தொழில் துறை யின் அடிப்படை அறிவு | நிர்மாணத் தொழிலில் பயன்படுத்தும் சீமெந்துக் கலவை, கொன்கிறீட் கலவை பற்றிய அறிவு, மேசன் தொழிலில் பயன்படுத்தும் உபகரணங்கள் பற்றிய அறிவு, திட்டங்களுக்காக மதிப்பீடுகளைத் தயார் செய்தல் | 3 மணித்தியாலங்கள் | 100 | 40 |

13. **கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படும் முறை :**

| *பரீட்சித்துப் புள்ளிகள் வழங்கப்படுகின்ற தலைப்புக்கள்* | *உச்ச புள்ளிகள்* |
|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| 2. மேலதிக அனுபவம் | 50 |
| 3. மேலதிக தொழிற் தகைமைகள் | 20 |
| 4. நேர்முகப் பரீட்சையின்போது வெளிப்படுத்தப்படுகின்ற திறன்கள் | 05 |
| மொத்தம் | 100 |

**குறிப்பு**.- தொழில்சார் பரீட்சையில் சித்தியடையும் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களில் தற்போது வெற்றிடமாகவுள்ள எண்ணிக்கையைவிட மூன்று மடங்கான விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தொழில் மற்றும் கட்டமைக்கப்பட்ட பரீட்சைகள் இரண்டிலும் உச்ச புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களிலிருந்து திறமை தொடர் வரிசையில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

14. விண்ணப்பங்கள் பின்வரும் படிவத்திற்கமைவாக சரியாகப் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். சம்பந்தப்பட்ட மாதிரிப்படிவத்திற்கு மாறான விண்ணப்பங்கள் மற்றும் தாமதமாகக் கிடைக்கப்பெறுன்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பங்கள் அல்லது அது தொடர்பான கடிதங்கள் அஞ்சலில் காணாமற்போனது தொடர்பான முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

15. எவரேனுமொரு விண்ணப்பதாரரின் விண்ணப்பப்பத்திரத்தில் ஏதேனுமொரு பொய்யான கூற்று இருப்பதன் காரணமாக அவர் தகுதியற்றவராக்கப்படுவதற்கும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவந்தால் அவர் சேவை நீக்கம் செய்யப்படுவதற்கும் இடமுண்டு.

16. ஒரு விண்ணப்பதாரர் இவ்விரண்டு பதவிகளுக்காகவும் விண்ணப்பிப்பதாயின் சம்பந்தப்பட்ட பதவிகளுக்காக வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.

இதில் குறிப்பிடப்படாத விடயத்தைப் பற்றி தீர்மானிக்கும் அதிகாரத்தை நீதி அமைச்சின் செயலாளர் கொண்டுள்ளார்.

பத்மசிறி ஜயமான்ன,
செயலாளர்.

நீதி அமைச்சு.
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

## நீதி அமைச்சின் நீர்க்குழாய் தொழில்நுட்பவியலாளர், மின்சார தொழில்நுட்பவியலாளர், மேசன் மற்றும் தச்சுத் தொழிலாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்தல்

இலக்கம் :................................
(அலுவலக உபயோகத்துக்காக)

விண்ணப்பிக்கும் பதவி :
நீர்க்குழாய் தொழில்நுட்பவியலாளர் - 1
மின்சார தொழில்நுட்பவியலாளர் - 2
மேசன் தொழிலாளர் - 3
தச்சுத் தொழிலாளர் - 4

(விண்ணப்பிக்கும் பதவிக்குரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

1. முழுப்பெயர் :
சிங்களத்தில்/ தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :
சிங்களத்தில்/ தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

3. சொந்த முகவரி :
சிங்களத்தில்/ தமிழில் :----.
ஆங்கிலத்தில் :----.

4. பிறந்த திகதி :----.

5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் ----- மாதங்கள் ---- நாட்கள் ----

6. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

7. ஆணா/ பெண்ணா என்பது :----.

8. விவாகமானவரா/ விவாகமாகாதவரா என்பது :----.

9. தொலைபேசி இலக்கம் :----.

10. கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :

ஆண்டு :----. சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |

க. பொ. த. (உயர் தரப்) பரீட்சை :

ஆண்டு :----. சுட்டிலக்கம் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |

11. தொழில்சார் தகைமைகள் (விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு) :----.

12. அனுபவம் (விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு) :----.
(10,11,12 இல் குறிப்பிட்டுள்ள தகவல்களுக்கான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்.)

13. பிற தகைமைகள் :----.

14. இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் குறிப்பிட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவை என்றும் உண்மையானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனுமொன்று பொய்யானது அல்லது தவறானது என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவந்தால் நான் தகுதியற்றவராக்குவதற்கும் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அதுபற்றி தெரியவந்தால் எந்தவொரு நட்டஈடுமின்றி வேலை நீக்கம் செய்யப்படுவேன் என்றும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற ....................................... என்பவர் தற்போது இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் ..................... பதவியில் நிரந்தர/தற்காலிக/அமய அலுவலர் ஒருவராக சேவை செய்கின்றார் எனவும், சொந்தக் கோவையின்படி அவரால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் சரியானவையெனவும் இவ்வலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டுள்ளது/எடுக்கப்படவில்லை என்றும் அவர் மேற்படி இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக இலச்சினை).

திகதி :----.

10-1711

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2016 (2017)

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாத ஆரம்பத்தில் பேராதனையில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதிக்கு கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடவிதானம்.**- முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்குப் பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் அதன் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. வினைத்திறன்காண் பரீட்சைகளின்போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

4. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் I ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய பாடங்கள் பின்வருமாறு :-

| விடயம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவ தற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நிதி முறைமைகள் | 2 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. நிருவாகம் | 2 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் - 1 | 2 மணித்தியாலம் | 100 | 40 |
| 4. திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் - 2 | 3 மணித்தியாலம் | 100 | 40 |

5. பரீட்சைக்கான பாடப்பரப்பு :

| விடயம் | பாடப்பரப்பு |
|---|---|
| 1. நிதி முறைமைகள் | (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க நிதி ஒழுங்கு விதி, நிதிப் பிரமாணம்- (X ஆம் அத்தியாயம் தவிர) |
| 2. நிர்வாகம் | (அ) அலுவலக முறை, அலுவலக முகாமை மற்றும் அலுவலக ஒழுங்குபடுத்தும் முறைமைகள் தொடர்பான அறிவு<br>(ஆ) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதியின் தாபன விதிக்கோவை அத்தியாயம் I-XXII வரையிலான அத்தியாயங்கள் மற்றும் தாபன விதிக் கோவையின் VI, VII, VIII, IX, XII, XIII, XIV, XV, XVI, XVII, XVIII, XIX, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII அத்தியாயங்கள் |
| 3. திணைக்களப் பிரமாணம் 1 | விலங்குச் சட்டம், விலங்கு நோய்ச் சட்டம் மற்றும் திணைக்களக் கட்டளை கால்நடை வைத்திய சேவைக்கு பொருத்தமான சுற்றுநிருபங்கள் |
| 4. திணைக்களப் பிரமாணம் 2 | (அ) மாதிரிகளை அனுப்புதல், பிரேத பரிசோதனை உள்ளிட்ட நோய் ஆய்வு, உறுதி ஆய்வுகூட பரிசோதனை முறைகள், கர்ப்பப் பரிசோதனை உள்ளிட்ட இனங்காணும் பரிசோதனை, வெளிக்கள நோய், ஆய்வு உறுதி பரிசோதனை, விலங்குகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்து, குருதிபாயம் (Sera) ஆகிய முற்காப்பு நடவடிக்கைகள்.<br>(ஆ) செயற்கை முறைச் சினைப்படுத்தல் செயல் முறையும் தொழில் நுட்பமும், இனப்பெருக்கத்தின் அடிப்படைத் தத்துவங்களும் கன்று வளர்ப்பும், அடைகாத்தல், குஞ்சு பொறித்தல், கோழிக் குஞ்சு வளர்ப்பு, கால்நடைகளுக்கான போசணை, உணவுப் பண்டம், பசுந்தீவனப் பயிர்ச்செய்கை, வெவ்வேறுபட்ட பயிர்கள் புற்செய்கை, உலர் புல், சைலேஜ் தயாரிப்பு, கால்நடைப் பராமரிப்பு என்பன.<br>(இ) பால் உற்பத்தி, கிருமி அழிக்கப்பட்ட பாலை போத்தல்களில் அடைத்து எடுத்துச் செல்லல், பால் சுகாதாரம், பாதுகாப்பு, பால் ஆடை பகுத்தல் உள்ளடங்கலாக பரிசீலனை செய்தல், பால் ஆடை நீக்கல், பட்டர் நெய் மற்றும் தயிர் உற்பத்தி.<br>(ஈ) அறுப்பு நிலையம், விலங்கு அறுப்புச் செய்தல் இறைச்சிகளை இனங்காணுதல் உட்பட இறைச்சிகளைப் பரீட்சித்தல். |

கீழே தரப்பட்டுள்ள 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையில் 5 ஆம் பந்தியைக் கவனிக்குமாறு இவ்வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

"திணைக்களப் பரீட்சைகளுக்குத் (பதவி உயர்வு மற்றும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை உட்பட) தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரச சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியிலாகும் அல்லது அரச கரும மொழியிலாகும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவைக்குச் சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான மொழியாக இருக்கவேண்டியது உத்தியோகத்தர்கள் சேவையில் சேர்ந்துகொள்வதற்கு தகுதிபெற்ற அல்லது அரச கரும மொழியாகும்".

6. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழிமூலத்தைப் பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

7. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்குத் தோற்றியமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

8. விண்ணப்பப்பத்திரங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தொடர் இலக்கம் 1 முதல் 8 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்களும் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்துக்கொள்ளவும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ்விதிகளும் பிரமாணங்களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவார்.

10. விண்ணப்பப்படிவங்கள் யாவும் 2016, நவெம்பர் 18 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் :-

கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்,
த. பெ. இல. 13,
கெட்டம்பே, பேராதனை.

11. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டியவராயின் அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணப்பதாரரது கையொப்பம் மற்றும் திணைக்களத் தலைவரது சான்றிதழ் என்பவற்றுடன் சரியாகப் பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே, அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியக்கொடுத்தல் வேண்டும்.

அவ்வாறு அறிவிக்கையில் விண்ணப்பதாரரது முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும். கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய கடிதத்தை தொலைநகலின் ஊடாக பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்பி வைப்பதற்காக விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது சிறந்ததாகும். அங்கு தேவையான தகவல்களை உறுதிசெய்து கொள்வதன்

பொருட்டு விண்ணப்பதாரரினால் தன்வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பம் பதிவுத்தபாலிலிட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

13. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமேயாகும். விண்ணப்பத்தில் அல்லது பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரது கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரிடம் இருந்து சான்றுப்படுத்தி இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தமக்குரித்தான பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின்கீழ் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். பரீட்சைத் தினமன்று தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப பிரதானியிடம் கையளிக்க வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் பரீட்சைக்கு அமருவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

14. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது :-

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதிக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.
(ஆ) இதன்பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-
முழுப்பரீட்சை - ரூபா 1,000.00
ஒரு பாடம் - ரூபா 500.00

இப்பரீட்சைக்கு இதற்கு முன்னர் விண்ணப்பித்துள்ள அல்லது தற்போதைக்கு அமர்ந்துள்ள விண்ணப்பதாரர் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்குமாறு தீவில் அமையப்பெற்றுள்ள எந்தவொரு தபால்/உப தபால் பணிமனையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

15. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

16. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கிடையே மொழி மூலங்களில் ஏதாவது பொருந்தாத் தன்மை அல்லது வேறுபாடு காணப்படுமேயாயின், அவ்வேளையில் சிங்கள மொழிமூல அறிவித்தலே ஏற்புடையதாக அமையும்.

டி. கே. ஆர். ஏக்கநாயக்க,
செயலாளர்,
கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு.

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு,
2016, ஒற்றோபர் 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2016/2017

FIRST EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS IN SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE - 2016/2017

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :-
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

☐ (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. (அ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ஆ) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் GUNAWARDHANA, H. M. S. K.)

(இ) முழுப்பெயர் (தமிழில்) :----.

2. தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக)

3. பால் :

பெண் - 1
ஆண் - 0

☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்) :-

(i) பாட எண் ☐☐ பாடம் ..............
(ii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iv) பாட எண் ☐☐ பாடம் ..............
(v) பாட எண் ☐☐ பாடம் ..............

6. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளீரா அல்லது தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :----.

7. பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

8. பதவிப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
திணைக்களத்தின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

9. இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு தகுதியுடையேன் எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

10. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் : ரூபா ----.
பணம் செலுத்தப்பட்ட பணிமனை :----. பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்துக்கொள்ளவும்) |
|---|

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல் :**

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

*விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டி உள்ளார் என அத்தாட்சிப் படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவிப்பெயரும்.
(அலுவலக முத்திரை)

திகதி :----.

(*கட்டணம் செலுத்தாதவிடத்து வெட்டிவிடவும்)

*10-1245/ 1*

---

## இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2016/2017

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாத ஆரம்பத்தில் பேராதனையில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடவிதானம்.**- இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்குப் பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் அதன் புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளின்போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

4. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய பாடங்கள் பின்வருமாறு :

பரீட்சை தொடர்பான விபரம் :

| வினாப்பத்திரம் | விடய இல. | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|---|
| 1 ஆம் பகுதி | 01 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| அல்லது | | | | |
| 2 ஆம் பகுதி | 02 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| மற்றும் | | | | |
| 3 ஆம் பகுதி | பகுதி 3 இல் இருந்து இரு வினாப்பத்திரங்களுக்கு மட்டும் விடையளிக்குக. | | | |
| 1. வினாப்பத்திரம் | 03 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. வினாப்பத்திரம் | 04 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. வினாப்பத்திரம் | 05 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 4. வினாப்பத்திரம் | 06 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 5. வினாப்பத்திரம் | 07 | 03 மணித்தியாலம் | 100 | 40 |

(தொடர்ச்சி)

| வினாப்பத்திரம் | விடய இல. | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|---|
| 6. வினாப்பத்திரம் | 08 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 7. வினாப்பத்திரம் | 09 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 8. வினாப்பத்திரம் | 10 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 9. வினாப்பத்திரம் | 11 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 10. வினாப்பத்திரம் | 12 | 03 மணித்தியாலம் | 100 | 40 |
| 11. வினாப்பத்திரம் | 13 | 03 மணித்தியாலம் | 100 | 40 |

5. **பரீட்சை தொடர்பான பாடப்பரப்பு :**

| வினாப்பத்திரத்தின் பெயர் | விடய இல. | பாடப்பரப்பு |
|---|---|---|
| 1 ஆம் பகுதி | 01 | பாடப்பரப்பின் 2:1, 2:2, 4:1, 4:2, 5:2, 5:8, 6:5, 7:2:1, 8:2, 8:2:2, 8:2:3, 8:3:1, 9:2, 9:4, 9:6, 9:7 பகுதிகள் |
| 2 ஆம் பகுதி | 02 | 1:1:1, 1:1:4, 1:2:1, 3:2, 3:1:1, 3:1:2, 3:2:1, 10:1:1, 10:1:2, 10:1:3, 10:1:4, 10:1:6, 10:2:1, 10:2:8, 10:4:1 |
| 3 ஆம் பகுதி : | | |
| வினாத்தாள் 1 | 03 | தொற்றுநோயியல் |
| வினாத்தாள் 2 | 04 | கால்நடைப் பொருளியல் |
| வினாத்தாள் 3 | 05 | மிருக வைத்திய பொது சுகாதாரம் |
| வினாத்தாள் 4 | 06 | விவசாய விஸ்தரிப்பு |
| வினாத்தாள் 5 | 07 | பரம்பரையியலும் சினைப்படுத்தலும் |
| வினாத்தாள் 6 | 08 | விலங்கு உடற்றொழிலியலும் இனப்பெருக்கமும் |
| வினாத்தாள் 7 | 09 | வீடமைப்பு முகாமைத்துவம் |
| வினாத்தாள் 8 | 10 | விலங்கு போசணை |
| வினாத்தாள் 9 | 11 | பசும்புல் மற்றும் விலங்கு தீவனப் பயிர் |
| வினாத்தாள் 10 | 12 | பிரயோக மிருகவியல் நுண்ணுயிரியலும் நீர்ப்பீடனவியலும் |
| வினாத்தாள் 11 | 13 | பிரயோக மருத்துவம், நோயியல் மற்றும் ஒட்டுண்ணியியல் |

**குறிப்பு**.- இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை விண்ணப்பதாரிகள் அமரவேண்டியது பகுதி 1 அல்லது பகுதி 2 வினாப்பத்திரம் இரண்டில் ஒன்றுக்கும் மற்றும் 3 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள 11 வினாப்பத்திரங்களில் இருந்து இரு வினாப்பத்திரங்களுக்கு மட்டும் அமரல் வேண்டும். சித்தி எய்துவதன் பொருட்டு ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை ஒவ்வொரு வினாப் பத்திரத்திலும் பெறுதல் வேண்டும்.

கீழே தரப்பட்டுள்ள 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையில் 5 ஆம் பந்தியைக் கவனிக்குமாறு இவ்வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

"திணைக்களப் பரீட்சை (பதவி உயர்வு மற்றும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை உட்பட) க்குத் தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரச சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியிலாகும் அல்லது அரச கரும மொழியிலாகும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவைக்குச் சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான மொழியாக இருக்கவேண்டியது உத்தியோகத்தர்கள் சேவையில் சேர்ந்து கொள்வதற்கு தகுதிபெற்ற அல்லது அரச கரும மொழியாகும்."

6. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பம் செய்த மொழிமூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

7. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்கு தோற்றியமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

8. விண்ணப்பப்பத்திரங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தொடர் இலக்கம் 1 முதல் 8 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்தில் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்துக்கொள்ளவும்.

மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ள வேண்டியதுடன் மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய அமையாத மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ்விதிகளும் பிரமாணங்களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

10. விண்ணப்பப்படிவங்கள் யாவும் 2016, நவெம்பர் 18 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

கால்நடை உற்பத்தி, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம்,
த. பெ. இல. 13,
கெட்டம்பே, பேராதனை

11. அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டியவராயின் அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்கு அமரும் மொழி மூலம், விண்ணப்பதாரரது கையொப்பம், மற்றும் திணைக்களத் தலைவரது சான்றிதழ் என்பவற்றுடன் சரியாகப் பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியக்கொடுத்தல் வேண்டும். அவ்வாறு அறிவிக்கையில் விண்ணப்பதாரரது பெயர், முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பம் செய்த பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும். கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய கடிதத்தை தொலைநகலின் ஊடாக பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியை அனுப்பி வைப்பதற்காக விண்ணப்பதாரரின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது சிறந்ததாகும். அங்கு தேவையான தகவல்களை உறுதி செய்து கொள்வதன் பொருட்டு விண்ணப்பதாரரினால் தன்வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி பரீட்சைக் கட்டணம் செலுத்துவதற்காக இருப்பின் பற்றுச்சீட்டின் பிரதி விண்ணப்பம் பதிவுத் தபாலிட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தயார் நிலையில் வைத்து இருப்பது சிறந்ததாகும்.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற்கொள்ளப் படமாட்டாது.

13. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப் பட்ட கடவுச்சீட்டு மாத்திரமேயாகும். விண்ணப்பத்தில் அல்லது பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரது கையொப்பம் நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தரிடம் இருந்து சான்றுப்படுத்தி இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் தமக்குரித்தான பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்கு அமருதல் வேண்டும். பரீட்சைத் தினமன்று தமது கையொப்பத்தைச் சான்றுப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை மண்டப பிரதானியிடம் கையளிக்க வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர் பரீட்சைக்கு அமருவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

14. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது :-

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) இதன்பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-

| | |
|---|---|
| முழுப்பரீட்சை | - ரூபா 1,000.00 |
| ஒரு பாடம் | - ரூபா 500.00 |

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள அல்லது இதற்கு முன்னர் விண்ணப்பம் செய்துள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்குமாறு தீவில் அமையப்பெற்றுள்ள எந்தவொரு தபால் அல்லது உப தபால் பணிமனையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் நிழற்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

15. விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

16. இங்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் வெளியிடப்படும் அறிவித்தல்களுக்கிடையே மொழிகளுக்கிடையே ஏதாவது பொருந்தாத தன்மை அல்லது வேறுபாடு காணப்படுமாயின், அவ்வேளையில் சிங்கள மொழிமூல அறிவித்தலே ஏற்புடையதாக அமையும்.

டி. கே. ஆர். ஏக்கநாயக்க,
செயலாளர்,
கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு.

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு,
2016, ஒற்றோபர் 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

*இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2016/2017*

SECOND EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS IN SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE - 2016/2017
(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் :-
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. (அ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ஆ) இறுதியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் GUNAWARDHANA, H. M. S. K.)

(இ) முழுப்பெயர் (தமிழில்) :----.

2. தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக)

3. பால் :

பெண் - 1
ஆண் - 0

☐
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

4. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

5. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்) :-

(i) பாட எண் [ ][ ] பாடம் ..............

(ii) பாட எண் [ ][ ] பாடம் ..............

(iii) பாட எண் [ ][ ] பாடம் ..............

(iv) பாட எண் [ ][ ] பாடம் ..............

(v) பாட எண் [ ][ ] பாடம் ..............

6. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ளீரா அல்லது தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :----.

7. பிறந்த திகதி :

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

8. பதவிப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
திணைக்களத்தின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

9. இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரித்தாவேன் எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

10. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் : ரூபா ----.
பணம் செலுத்தப்பட்ட பணிமனை :----. பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்துக்கொள்ளவும்) |
|---|

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல் :**

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

*விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டி உள்ளார் எனவும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும், பதவிப்பெயரும்.
அலுவலக முத்திரை.

திகதி :----.

(*கட்டணம் செலுத்தாத விடத்து வெட்டிவிடவும்)

10-1245/2

## தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிப் பயிற்சிக்காக விஞ்ஞானவியல் தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2016

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் தாதியர் சேவையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கற்கை நெறிக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய பல்கலைக்கழகத்தினூடு விஞ்ஞானவியல் தாதியர் பட்டம் பெற்ற கீழே குறிப்பிடப் பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரிகளினது பட்டம் வலுப்பெற்ற தினம் மற்றும் GPA பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட திறமைப் பட்டியலின் பிரகாரம் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களின் பிரகாரம் ஆண்டு தோறும் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படும் எண்ணிக்கையில் 25% இனை விஞ்ஞானவியல் தாதியர் பட்டதாரிகளை விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளில் இருந்து தெரிவுசெய்யப்படுவர்.

2. **பதவிக்கான கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய பல்கலைக்கழகத்தினூடு விஞ்ஞானவியல் தாதியர் பட்டத்தை (Bsc. Nursing) பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **உடற்தகைமை மற்றும் ஏனைய தகைமைகள் :**

(அ) இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு எல்லாவிதத்திலும் உடல் ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) பதவிக்குரிய கடமைகளைச் செய்வதற்குப் போதியளவு உடல் ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் ;

(இ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;

(உ) ஆண்/ பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும் ;

(ஊ) 2016.11.25 ஆந் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(எ) பட்டம் வலுப்பெற்ற தினம் 2016.11.25 ஆந் திகதிக்கு முற்பட்ட திகதியாக இருத்தல் வேண்டும்.

4. **விண்ணப்பிக்கும் முறை :**

(அ) இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டும். அதற்காக A4 அளவுத் தாளினைப் பயன்படுத்தல் வேண்டும். விண்ணப்பத்தில் இலக்கம் 1 தொடக்கம் 12 வரை முதல் பக்கத்திலும், 13 தொடக்கம் 15 வரை இரண்டாம் பக்கத்திலும், 16 ஐ மூன்றாம் பக்கத்திலும் அமையும் வண்ணம் தயாரித்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பதாரிகள் 300 ரூபா பெறுமதிக்கு இலங்கை வங்கி, தப்ர பேன், இல. 7041318, சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகம்-பரீட்சைக் கட்டணம் அறவிடல் எனும் கணக்கிற்கு வரவு வைத்து பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டினுள் கழராதவாறு ஒட்ட வேண்டும். அக்கட்டணம் எக்காரணம் கொண்டும் மீண்டும் திருப்பித்தர மாட்டாது என்பதுடன், பிற பரீட்சைகளுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது ;

(இ) இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவர்/ கல்வி நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவர்/ அரச கணக்காளர் சேவையின் உத்தியோகத்தர் ஒருவர்/ அரச பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சட்ட வழக்கறிஞர்/ பிரசித்த நொத்தாரிசு/ வருட சம்பளம் 2,40,360 ரூபாவிற்குக் குறையாத வேதனம் பெறும் ஓய்வூதிய சம்பளத்துடன் கூடிய அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் ;

(ஈ) முறையாகப் பூர்த்திசெய்த விண்ணப்பத்தைக் கடித உறையில் இட்டு அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூளையில் "தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கை நெறிப்பயிற்சிக்காக விஞ்ஞானவியல் தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2016" எனவும், உரிய பட்டம் மற்றும் கல்வி ஆண்டு என்பவற்றையும் குறிப்பிட்டு, ''பணிப்பாளர், நிர்வாகம் 1, சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, ''சுவசிறிபாய'', இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு 2016.11.25 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும்.

**குறிப்பு**.- மேற்படி (2) மற்றும் (3) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் ஏனைய சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியான 2016.11.25 ஆந் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5. அரச அல்லது அரச சார்பான நிறுவனங்களில் சேவை செய்பவர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்ப வேண்டும். அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு என்பதுடன், உரிய பயிற்சியைச் சிறப்பாக நிறைவு செய்தால் அல்லது செய்யாதவிடத்து எக்காரணத்தைக் கொண்டும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் செல்ல முடியாது.

6. இப்பொதுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத மற்றும் மாதிரி விண்ணபப்படிவத்தின் பிரகாரம் அமையாத விண்ணப்பங்கள், வங்கி பற்றுச்சீட்டு ஒட்டப்படாத மற்றும் 2016.11.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுசெய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது.

7. மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளுள் பட்டம் வலுப்பெற்ற தினம் மற்றும் GPA பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட திறமைப் பட்டியலின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்டவர்கள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் பொதுவான நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படுவதுடன், நேர்முகப் பரீட்சை சபையினால் தாதியர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பரிசீலித்தல் மற்றும் உடற்தகைமை என்பன பரிசீலிக்கப்படும்.

**குறிப்பு** :

(அ) சேவை அவசியத்தின் பிரகாரம் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளும் தொகை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுபவர்களின் தொகை என்பன சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(ஆ) நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும் சகலரையும் பயிற்சிக்கு இணைத்துக்கொள்வதற்காக இச்சுற்ற றிக்கையில் எவ்விடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்பதை கவனத்திற்கொள்ளவும்.

(இ) நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகைமையுடையோர், தகைமையற்றோர் மற்றும் தெரிவுசெய்யப்பட்டவர்கள் பற்றிய விபரங்கள் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன், எவருக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்பட மாட்டாது.

8. நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகளால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட பிரதிகள் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) பட்டத்தின் மூலப்பிரதி மற்றும் GPA பெறுமதியைக் காட்டும் சான்றிதழ் (இச்சான்றிதழ்களின் உறுதிப்படுத்திய பிரதிகளை விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.) ;

(இ) தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரம்.

9. **பயிற்சி வழங்கும் முறை** :

| பயிற்சிநெறி | அக்கற்கைநெறிக்கான கால எல்லை | மொழி |
|---|---|---|
| தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு | 6 மாதங்கள் | ஆங்கிலம் |

(அ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிக்கு அந்தந்த பயிற்சிப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவர். கற்கை நெறிகள் ஆங்கில மொழியில் இடம்பெறும்.

(ஆ) பயிற்சிப் பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படுகின்ற பயிலுனர்கள் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவில் இருக்கும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படல் வேண்டும். அவ்விதிமுறைகள் மற்றும் அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(இ) பயிற்சிக் காலத்தின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது தான் உள்வாங்கப்படும் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவில் இருக்கும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படத் தவறும் பயிலுநர்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

(ஈ) பயிற்சிக் காலத்தில் அரச நிருவாக சுற்றறிக்கை 03/ 2016 இன் நியதிகளுக்கு அமைய மாணவ தாதியர்களுக்கு இரண்டாம் வருடத்தில் வழங்கப் படுகின்ற மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

(உ) தாதியர் பயிற்சிப் பாடசாலைக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும்போது பயிற்சியைச் சிறப்பாக நிறைவுசெய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்தப் பயிற்சியை முழுமையாக நிறைவுசெய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்தபட்சம் ஐந்து வருடங்கள் (5) மாகாணத்தில் அல்லது மத்திய அரசின் கீழுள்ள வைத்தியசாலைகள் அல்லது சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சேவையாற்றுவதாகவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். பயிற்சியின்போது பயிற்சியிலிருந்து விலகினால் அல்லது பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், மேற்படி (இ) பந்தியின் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று ஐந்து (5) வருடங்கள் உரிய மாகாணத்தில் அல்லது மத்திய அரசில் நியமிக்கப்பட்ட வைத்தியசாலை அல்லது சுகாதார சேவைகள் திணைக்களத்தில் அல்லது உரிய பதவியில் சேவை செய்வதற்குத் தவறின் பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் பயிற்சிக்காக செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் பிணை அவரினால் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **சேவையில் ஈடுபடும் நியதிகள்**.- பயிற்சியின் இறுதியில் குறித்த பதவியில் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு/வழங்காமல் இருப்பதற்குத் தீர்மானித்தலானது அச்சந்தர்ப்பத்தில் நிலவும்

வெற்றிடங்களுக்கேற்ப ஆகும். அதன் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு தீர்மானித்தால் பயிலுநர்கள் தாம் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட கற்கைநெறிக்கு உரித்தான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் வெற்றிடங்களின் பிரகாரம் 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன் அட்டவணை I இன் MT-7-2016 சம்பளப் படிமுறைக்கு உரித்தான III ஆம் தரத்தின் பதவி நிலை தாதியர் பதவிகளுக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பதவிக்கு நியமிக்கப்பட்டால் பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/ 2016 இன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவானது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

11. விண்ணப்பத்தை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கவும். பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிருபணமாகினால், சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்துச் செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கறுப்புப்பட்டியலில் அவருடைய பெயர் சேர்க்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவினங்கள் மற்றும் ஒப்பந்தப் பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

12. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் உரிய கற்கை நெறியைத் தொடர்வதற்கு மற்றும் நாட்டின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்கு உடல் மற்றும் உள ரீதியாக ஆரோக்கியமானவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கு பயிற்சியின் முதலாம் மாதத்தினுள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், மருத்துவப் பரிசோதனையில் ஆரோக்கியமற்றவர் எனக் காணப்பட்டால் விண்ணப்பதாரி பயிற்சியில் ஈடுபடுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவர்.

13. இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுதல் தொடர்பாக உரிமைகள் ஏதும் இல்லை. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரியவரின் பயிற்சியில் இருந்து நீக்கப்படுவார் அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

14. மேற்படி இணைத்துக்கொள்ளப்படும் சகல உத்தியோகத்தர்களும் உரித்தாகும் சகல நியதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை விதிமுறைகள், சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் விதிக்கப்படும் கொள்கைத் தீர்மானங்கள், அரச சேவை ஆணைக்குழுவினால் அரச சேவைகள் தொடர்பாக விதிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கும், தாதியர் சேவை பிரமாணக் குறிப்பின் நியதிகளுக்கும், அரச நிதிப் பிரமாணத்திற்கும், அரசினால் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மற்றும் அவற்றில் காலத்திற்குக்காலம் ஏற்படுத்தக்கூடிய திருத்தங்கள் என்பவற்றுக்குக் கட்டுப்படல் வேண்டும்.

15. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படுபவர்களுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இவ்வமைச்சு கட்டுப்படவில்லை. அவ்வாறு வழங்குவதாயின், அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட வீடு அல்லது அறை வாடகை, தண்ணீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அறவிடப்படும்.

16. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

அனுர ஜயவிக்கிரம,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
'சுவசிறிபாய', இல. 385, வண. பத்தேகம விமலவங்ச
தேரோ மாவத்தை,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தாதி வழிகாட்டல் மற்றும் ஒருங்கிணைப்பு கற்கைநெறிப் பயிற்சிக்காக விஞ்ஞானவியல் தாதி பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளல் - 2016**

விண்ணப்பத்தைப் பூர்த்திசெய்யமுன் பொது சுற்றறிக்கையை நன்றாக வாசிக்கவும்.

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

(இ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

3. அஞ்சல் முகவரி :----.

4. நிந்தர முகவரி :----.

5. தொலைபேசி இலக்கம் :----.

6. (அ) வதிவிட மாவட்டம் :----.

(ஆ) நீங்கள் இம்மாவட்டத்தின் நிரந்தர வசிப்பாளரா ? :----.

7. (அ) பிறந்த திகதி :
ஆண்டு ---- மாதம் ---- திகதி ----

(ஆ) 2016.11.25 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----

8. பால் :
ஆண் ☐ பெண் ☐

(உரிய பெட்டியில் X அடையாளம் இடவும்)

9. நீங்கள் இலங்கைப் பிரசையா ?

ஆம் ☐ இல்லை ☐

(உரிய பெட்டியில் X அடையாளம் இடவும்)

10. திருமணமானவரா ?

ஆம் ☐ இல்லை ☐

(உரிய பெட்டியில் X அடையாளம் இடவும்)

11. உயரம் :
அடி .......................... அங்குலம் ............................

12. கல்வித் தகைமை :

| சித்தி யடைந்த பட்டம் | சித்தி | தரத்தின் பொது பெறுமதி (GPA) | பல்கலைக் கழகம் | கல்வி ஆண்டு |
|---|---|---|---|---|
| | | | | |

13. ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்றத் தண்டனை அனுபவித்துள்ளீரா ?

ஆம் ☐ இல்லை ☐

(உரிய பெட்டியில் X அடையாளம் இடவும்)

ஆமெனில், தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக :----.

14. **விண்ணப்பதாரியின் உறுதிமொழி :**
நான் இப்பொது சுற்றறிக்கையை நன்றாக வாசித்து விளக்கம் பெற்று அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு இவ்விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தேன் எனவும், நான் வேறு எந்தக் கற்கைநெறிகளையும் தொடரவில்லை எனவும், இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சகல விபரங்களும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன்.

எனது இந்த உறுதிமொழியில் அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது பிழை அல்லது தவறு என நிருபணமாகினால், பயிற்சியின்போது எனின், நான் பயிற்சிக்குத் தகுதியற்றவர் எனவும், நியமனம் கிடைத்த பின்னர் எனின் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

அவ்வாறே இவ்வாட்சேர்ப்பு வெளிவாரியான ஆட்சேர்ப்பு எனவும், உரிய பயிற்சியைச் சிறப்பாக நிறைவுசெய்தால் அல்லது செய்யாதுவிடத்து எக்காரணத்தைக் கொண்டும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் செல்ல முடியாது என்பதையும் நான் நன்கறிவேன்.

| பற்றுச்சீட்டைக் கழராத விதத்தில் இங்கு ஒட்டவும். |
|---|

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

15. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**
இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................ அவர்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ............................ ஆந் திகதி இட்டார் எனவும் உறுதிப் படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
(பதவி முத்திரையுடன்).

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

16. **விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி அரச சேவையில்/ மாகாண அரச சேவையில் உள்ளவராயின் திணைக்களத் தலைவரின் உறுதிமொழி :**

மேற்படி விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி .................................................. இத்திணைக்களத்தில் ....................................... பதவி வகிக்கின்றார் என உறுதிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துவதுடன், இவர் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும்/ முடியாது என அறியத்தருகின்றேன்.

அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு எனவும், உரிய பயிற்சியைச் சிறப்பாக நிறைவுசெய்தால் அல்லது செய்யாதவிடத்து எக்காரணத்தைக் கொண்டும் தற்போது வகிக்கும் பதவிக்கு மீண்டும் செல்ல முடியாது என்பது தெளிவுபடுத்தப்பட்டது எனவும் அறியத்தருகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையுடன்).

திணைக்களத் தலைவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*10-1806*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.